[31st March 1969

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பள்ளிகளைப் பொறுத்த வரையில் கையெழுத்து திருத்தமாய் அமைய தேவையான ஏற்பாடுகள் மாணுக்கர்களின் பாட திட்டத்திலேயே இடமளிக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பள்ளி நிலையில்தான கையெழுத்தை நல்ல முறையில் திருத்தமுடியுமே தவிர கல்லூரி நிலையில் அல்ல.

Labourers of the Corporation of Madras

* 323 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Corporation workers met the Chief Minister on the 13th January 1968 ;

(*b*) the assurance given to them by the Chief Minister ; and

(*c*) the action taken thereon ?

சென்னை மாநகராட்சி தொழிலாளர்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகராட்சி தொழிலாளர்கள் 1968 ஜனவரி 13-ம் தேதி முதல் அமைச்சரை சந்தித்தார்களா ?

(இ) அவர்களுக்கு முதல் அமைச்சர் கொடுத்த வாக்குறுதி என்ன ?

(உ) வாக்குறுதியின் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இதுகுறித்து தகவல் எதுவும் இல்லை.

(இ) சென்னை மாநகராட்சித் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 13—1—1968-ல் முன்னுள் முதலமைச்சரைச் சந்தித்ததாகக் கூறப்படும் நாளன்று அவர்களுக்கு அவர் என்ன உறுதிமொழி கொடுத்தார் என்பது பற்றி அரசு அறியாது.

(உ) இவ் வினு எழவில்லை.

Strike by Madras Corporation Workers

* 324. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the workers of the Madras Corporation struck work in December 1967 ; and

(*b*) if so, the nature of their demands ?

சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

திரு என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967 டிசம்பரில், சென்னை மாநகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆமெனில், இவர்களின் கோரிக்கைகள் யாவை ?